# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்)

***1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். ஏ. சுமந்திரன் அவர்களால் 2016, சனவரி மாதம் 27 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2015, திசெம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

**[ 79 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உ யிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன் றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*முதன்மைச் சட்டவாக்கத் திற்கு 28(அ) எனும் புதிய பிரிவை உட் புகுத்துதல்.*

**2.** 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 28 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 28(அ) பிரிவு எனக் குறிப்பீடுசெய்யப்படும்.

*“இழுவை வலை மூலமான மீன்பிடிச் செயற்பாடு களைத் தடை செய்தல்.*

28(அ). (1) ஆள் எவரேனும் தானாகவோ அல்லது இன்னொருவர் மூலமாகவோ இழுவை வலைகளைப் பயன்படுத்தி, அதாவது இரண்டு சிறகுகள் அற்ற இழுவை வலைகளைப் பயன்படுத்தி வலையின் சுயாதீன முடிவிடங்களில் நிலைக்குத்துக் கம்பங்களைப் பயன்படுத்தும் வலைகள் உட்பட, மீன்பிடிச் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது.

(2) இலங்கை நீர்ப்பரப்புக்களில் இழுவைவலை மூலமான மீன்பிடிச் செயற்பாடுகளை மேற்கொள் வதற்காக இழுவை வலைகளை எவரேனும் ஆள் பாவிக்கவோ, சொந்தமாக வைத்திருக்கவோ, இறக்குமதி செய்யவோ, வாகனத்தின்மூலமாக எடுத்துச் செல்லவோ, கொள்வனவு அல்லது விற்பனை செய்யவோ முடியாது.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் II இன்கீழ் இலங்கை நீர்ப்பரப்புக்களில் இழுவை வலை, வலைகள் மூலமான மீன்பிடிச் செயற் பாடுகளை மேற் கொள்வதற்கு உரிமம் அளித்தல் ஆகாது.

(4) இலங்கை நீர்ப்பரப்புக்களில் இழுவை வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கென முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் ஏதேனும் உரிமம் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்குமாயின் அத்தகைய உரிமம் புதுப்பிக்கப்படலாகாது என்பதுடன் அத்தகைய உரிமத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படலாகாது.

ஆயினும், இழுவை வலைகளைப் பயன்படுத்துவதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட உரிமம் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் திகதிக்கு முந்திய நாளன்று அமுலிலிருக்குமாயின், அவ்வுரிமம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், எக்காரணத்திற்காக அவ்வுரிமம் வழங்கப்பட்டதோ அந்த குறிப்பிட்ட காரணத்திற்காகவும் அவ்வுரிமத்தில் குறிப்பிட்டகாலம் வரையும் செல்லுபடியானதாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 49(7) எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**3.** இந்த முதன்மைச் சட்டவாக்கத்தின் 49(6) ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் அந்தப் பிரிவு 49(7) எனக் குறிப்பீடுசெய்யப்படும் :-

"தவறுகள். 49(7). இச்சட்டத்தின் 28(அ) ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் தவறு இழைத்தவராக நீதவான் முன்னிலையில் சுருக்க முறை விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பின்பேரில் இரண்டு வருடங்களை விஞ்சாத மறியற்றண்டனை அல்லது 50,000 ரூபாவுக்குக் குறையாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவிற்கான திருத்தம்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு "இலங்கை பெரும் நீர்ப்பரப்பு" என்ற சொற்களுக்கான பொருள்கோடலின் பின் பின்வருவனவற்றை உட்புகுத்துவதன்மூலம் திருத்தப்படுகின்றது :-

" "இழுவை வலை" என்பது வலையின் மறுமுனையில் இரண்டு சிறகுகள் இணைக்கப்பட்டுள்ள அல்லது இணைக்கப்பட்டிராததுடன் நுனிப்பகுதியில் மடி அல்லது பை ஒன்றுடனான கூம்பு வடிவில் உடற்பகுதியைக் கொண்டு இழுக்கப்படும் வலைகள் எனப் பொருள்படும்.

"இழுவை" என்பது நடுக்கடலில் அல்லது கடற்படுக்கை அருகில் பொறிமுறைரீதியாக இழுவை வலையொன்றை இழுப்பதன்மூலமாக மேற்கொள்ளப்படும் மீன்பிடிச் செயற்பாடு எனப் பொருள்படும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் *மாதம் 15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான *சந்தாப்பணம்* அத்தியட்சகர், *அரசாங்க* வெளியீட்டலுவலகம், *அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை,* பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்